00183

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்ட கற்கைகள் திணைக்களம்

சட்டமானி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 5

இறுதிப் பரீட்சை -2017/2018

**LWU 3311/LLU5709 – நிர்வாகச் சட்டம்**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 20-02-2020 நேரம் : பி.ப 1.30 - பி.ப 4.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு.(08)

ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "இந்நீதிமன்றின் அன்றாட பணிகளுள், பாராளுமன்றின் நியதிச்சட்டங்களது வலிதாந்தன்மையை சோதனை செய்வதற்கு நாம் வழக்கப்பட்டுள்ளோம். நிர்வாக சட்டத்தின் வலிதாந்தன்மை குறித்து நோக்க மிகக் குறைந்தளவு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ள போதும், அவையும் அதேயளவு அந்தஸ்தின் மீதே காணப்படுகிறது.

   ( R V Richards, Exparte Fitzpatrick and Browne (1955) 92 CLR 157,165)

   மேலுள்ள கூற்றின் பின்னணியில், இலங்கை தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தி நிர்வாக நடவடிக்கையை நீதியியல் மீளாய்வு செய்தல் எனும் கருத்தேற்பை நுணுக்கமாகக் மதிப்பிடுக.

   (20 புள்ளிகள்)

2. செரண்டிப் நாட்டின் ஆயுதக்கூட்டுத்தாபனம் ஆனது, ஆயத கூட்டுத்தாபன சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட, அரசால் ஆளப்படும் ஒரு அமைப்பாகும். செரண்டிப்பின் பாதுகாப்பு திணைக்களத்திற்கு இராணுவப் பொருட்கள், உபகரணங்கள், வசதிகள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக அமைக்கப்பட்டது ஆகும். அரசு ஆனது, பாதுகாப்பு அமைச்சரின் ஊடாக ஆயுதக்கூட்டுத்தாபனம் மீதான உரிமை கட்டுப்பாட்டை செயற்படுத்துகிறது. ஆயுதக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் அதன் சபையால் நிர்வகிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுவதுடன் இரண்டு நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஒன்பது நிர்வாகம் - சாரா உறுப்பினர்களை சபை கொண்டுள்ளது. ஆயுத கூட்டுத்தாபன சட்டத்தின் உறுப்புரைகளின் பிரகாரம் அமைச்சர் பதவியை முன்பு வகித்தவரால் , ஜெனரல் டேவிட் என்பவர் சபைக்கு நியமிக்கப்பட்டார். பல்வேறு ஆட்சி சார் விடயங்கள் குறித்து நோக்க டேவிட்டுக்கு தலைவர் பதவி அளிக்கப்பட்டது. அமைச்சரால் கூட்டப்பட்ட மூன்று சபைக் கூட்டங்களுக்கும் ஜெனரல் டேவிட் சமூகமளிக்கவில்லை. அமைச்சர் தனது அதிருப்தியை கடிதம் ஒன்றின் மூலமாகத் தெரிவித்தார். ஜெனரல் டேவிட், அமைச்சர் அக்கூட்டங்களுக்கான அறிவித்தல் தாமதமாக கிடைக்கப் பெற்றதாக பதிலளித்தார். அவரால் ஒழுங்குபடுத்தப்பட்ட முற்கூட்டிய முக்கிய பணிகளை, இரத்து செய்ய அவரால் இயலவில்லை என தெரிவித்தார். மேலும், அவர் சபையுடனான வருங்கால கூட்டங்கள், தன் (தலைவர்) மூலமாக விடுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சரால் நல்லேது காப்பப்பட்டு சபையின் உறுப்பினர் ஒருவரது சேவைகள் முடிவிற்கு கொண்டு வரப்படின் அவர் அல்லது அவன் பதவியில் இருந்து நீங்க வேண்டும்'' எனக் குறிப்பிடும் ஆயுதக் கூட்டுத்தாபனத்தின் பிரிவு 10 இற்கு அமைய, ஜெனரல் டேவிட்டின் சபை அங்கத்துவத்தை அமைச்சர் கடிதம் ஒன்றின் மூலமாக முடிவுறுத்தினார். ஜெனரல் டேவிட்டிற்கான கடிதமானது , அமைச்சரின் கருத்து பிரகாரம் ஜெனரல் டேவிட் " திணைக்களத்திற்கு சிறந்த அக்கறையாளராக செயற்படவில்லை எனவும், சபையின் தலைவராக அவரது சேவைகளும் இதனையடுத்து முடிவுறுத்தப்படுவதாகவும் விளக்கியது.

செரண்டிப்பின் சட்டமுறைமை இலங்கையின் சட்டமுறைமையை ஒத்தது எனக்கருதுக. மேலுள்ள சந்தர்ப்பத்துடன் தொடர்புடைய சட்ட விடயங்களை ஆராய்க. உமது விடையை பொருத்தமான எடுத்துக்கபட்டுக்களை குறிப்பிட்டு ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

3. நீதி அமைச்சு ஆனது , நீதியை அணுகுதல் செயற்திட்டத்தின் கீழ், அமைச்சுக்களின் நிர்வாக அதிகாரிகளுக்கு பயிற்சி பட்டறை ஒன்றை ஏற்பாடு செய்கிறது. அமைச்சு பல்வேறு ஆய்வுத் தலைப்புக்களை இணங்கண்டுள்ளது. "சட்டவாட்சி மற்றும் நிர்வாக நடவடிக்கையின் வலிதாந்தன்மை'' என்பது அவற்றுள் ஒன்றாகும். உம்மை ஒரு வளநபராக உரை நிகழ்த்த அமைச்சு வரவேற்கிறது.

பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுளுடன் மேலுள்ள ஆய்வுத் தலைப்பு மீது, விரிவான மொழியப்பட்டுள்ள உரையைத் தயாரிக்க.

(20 புள்ளிகள்)

4. லதா ஐலண்ட் நாட்டின் வடமேற்கு பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி கற்கைகளில் முதுமாணி பட்டப்படிப்பினை தொடர்ந்து வரும் மாணவி ஆவாள். அவள் தனது ஆய்வு அறிக்கையை ( Dissertation) சமர்ப்பித்ததுடன், பரீட்சை திருத்துனர் அதனைக் கோவைப்படுத்துவதில் லதா பல்வேறு நூல்களில் இருந்து பல மூலங்களை பிரதி செய்து இருந்தமையைக் கண்டறிந்தார். திருத்துனர் உரிய பல்கலைக்கழக அமைப்பிற்கு எழுத்து மூலமாக முறைப்பாடு ஒன்றை முன்வைத்தார். லதா கருத்து திருட்டு ( Plagiarism ) மீது குற்றம் சாட்டப்பட்டதுடன், 2019 டிசம்பர் 17 அன்று குற்றசாட்டுப் பத்திரம் அளிக்கப்பட்டது. அவள், 2020 ஜனவரி 2 அன்று விசாரணைக் குழு முன் தோன்றுமாறு கோரப்பட்டு இருந்தாள். லதா குழுவின் முன் தோன்ற இரு வாரங்கள் மேலதிகமாக வழங்குமாறும் அவளது வழக்கை வாதிட சட்டத்தரணி ஒருவரை நியமிப்பதற்கும் சந்தர்ப்பம் ஒன்றை வழங்குமாறும் குழுவிடம் எழுத்து மூலம் வேண்டினாள்.

2019 டிசம்பர் 27 வரை, எவ்வித பதிலும் பெறாத காரணத்தினால் அவள் பல்கலைக்கழகத்திற்கு சென்று தனது வேண்டுகோள் குறித்து விசாரித்தாள். கல்விசாரா ஊழியர்களது தொழிற்சங்க நடவடிக்கைகள் 2020 ஜனவரி 14 ஆம் திகதி முதல் நடைபெற அட்டவணைப்படுத்தப்பட்டு இருப்பதாகவும், அது இரு மாதங்களுக்கு மேலதிகமாக நீடிக்கக்கூடும் எனவும் பதிவாளர் தெரிவித்தார். எனவே பல்கலைக்கழகத்திற்கு இவ்விசாரணையை இயலுமான அளவு விரைவில் நிறைவு செய்ய வேண்டியிருந்தமையினால் அவளிற்கு அதிக காலம் அளிக்க முடியாது என பதிவாளர் மேலும் தெரிவித்தார். சட்டத்தரணி ஒருவரை அமர்த்துவதற்கான அவளது இரண்டாவது கோரிக்கை விசாரணைக்குழுவால் ஏற்கப்படவில்லை எனவும் பதிவாளர் பதிலளித்தார்.

குழுவின் முடிவை கேள்விற்குட்படுத்தக்கூடிய ஏதுக்கள் எவை என அறிய லதா விரும்புகிறாள். ஐலண்ட் நாட்டின் சட்ட முறைமை ஆனது இலங்கையின் சட்டமுறைமையை ஒத்தது எனக்கருதுக. பொருத்தமான சட்ட எடுத்துக்காட்டுகளுடன் லதாவிற்கு அறிவுறுத்துமாறு நீர் வேண்டப்படுகிறீர்.

(20 புள்ளிகள்)

5. ரெஸ்டோரியா நாட்டின் நியுவ்லண்ட் மாநகரசபை ஆனது மாநகர சபைகள் சட்டத்தின் கீழ் மாநகர எல்லைகளிற்குள் குப்பையை சேகரிக்க அதிகாரம் பெற்றுள்ளது. பெப்ரவரி 5 ஆம் திகதியில் இருந்து குப்பை சேகரிப்பதை மாநகரசபை நிறுத்தியது. நகரம் முழுவதும் பல்வேறு இடங்களில் குப்பை குவிக்கப்பட்டு இருந்தது. 'பலய' எனும் தொலைக்காட்சி அலைவரிசைக்கு பேசிய பிரதேச வாசிகளுள் ஒருவரான நிகால் என்பவர், இரண்டு வார காலங்களுக்கு மேலாக குப்பை சேகரிக்கப்படாது காணப்படுவதாக முறையிட்டார். நிலவும் மழைக்காலத்துடன். திறனற்ற குப்பை அகற்றலானது, டெங்கு பரவுதல் முதலான பல்வேறு விளைவுகளை அதிகரிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

பிரதேசவாசிகள் பல்வேறு வேண்டுகோள்களை வாய் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் மாநகர சபைக்கு முன்வைத்திருந்த போதும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. பிரதேசவாசிகள் சட்ட நிவாரணங்கள் குறித்து அறிய விரும்புகின்றனர்.

டெஸ்டோரியாவின் சட்டமுறைமை இலங்கையின் சட்டமுறைமையை ஒத்தது எனக்கருதி, பிரதேசவாசிகளுக்கு பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் வழக்குதாரணங்கள் என்பவற்றை எடுத்துக்காட்டி அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

6. இலங்கையின் நிர்வாகச் சட்டத்தின் கீழ் விளம்பல் கட்டளைகளின் தாக்கத்தை ஆராய்க.

(20 புள்ளிகள்)

7. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் உத்தியோப்பியாவின் தலைநகரில் உள்ள மூன்று தேவாலயங்களும், மூன்று ஆடம்பர ஹோட்டல்களும் ஒழுங்கமைக்கப்பட்ட தீவிரவாத தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் தொடர்களில் குறிவைக்கப்பட்டு இருந்தன. குண்டு வெடிப்புகளின் போது, பல்வேறு குடியிருப்பு கட்டடங்களும் சேதப்படுத்தப்பட்டன. பாதிக்கப்பட்ட பிரதேசவாதிகள் நாட்டின் அதிகார சபைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக தங்குமிடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

சம்பவங்களைத் தொடர்ந்து, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆனது, அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டதுடன், "2019 ஏப்ரல் தீவிரவாத தாக்குதல்கள் மூலமாக பாதிக்கப்பட்டுள்ள பிரதேசவாசிகள் நட்டஈட்டுக்கு உரித்துடையோர்" என்றும் அறிவித்தது. சுற்றறிக்கை ஆனது, தகுதியுடைய விண்ணப்பதாரிகளை தெரிவு செய்தல் தொடர்பில் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட முடிவு முற்றும் முடிவானதுடன் எந்த நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்த முடியாது எனவும், சட்டத்தின் உறுப்புரையை உள்ளடக்கியிருந்தது.

பாதிக்கப்பட்ட வதிவிடவாளர் ஒருவரான ஜோன், விண்ணப்பம் ஒன்றை முறையான வாயில்கள் ஊடாக அமைச்சிற்கு முன்வைத்தான். ஒரு மாத முடிவில், அமைச்சானது நிவாரணம் பெற தகுதியான பயனாளிகளின் பட்டியல் ஒன்றை வெளியிட்டு இருந்தது. ஜோன் தனது பெயர், பட்டியலில் காணப்படாமையினை அவதானித்தான். அவன் அமைச்சிடன் தான் ஏன் நிவாரணம் பெற உரித்துடையவன் அல்ல என விசாரித்தான். மேற்குறிப்பிட்ட தீவிரவாத தாக்குதல்களில் ஜோனுடைய உறவினர்களுள் ஒருவர் முக்கிய சந்தேக நபர் எனக்குறிப்பிடப்பட்ட முறைப்பாடு ஒன்று ஜோன் வசிக்கின்ற பகுதியைச் சார்ந்த பிரதேசவாசிகளிடமிருந்து கிடைக்கப் பெற்றது என அதிகாரிகள் கூறினர். இதன் காரணமாக அவனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

அவன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிற்கு தனது விண்ணப்பத்தை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி மேன்முறையீடு ஒன்றை முன்வைத்தான். அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் முற்றும் முடிவானது எனக் குறிப்பிட்ட பதில் ஒன்றைப் ஜோன் அமைச்சிடம் இருந்து பெற்றான்.

ஜோன், அமைச்சரின் தீர்மானத்தை கேள்விற்குட்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறான்.

உத்தியோப்பியாவின் சட்டமுறைமை இலங்கையின் சட்டமுறைமையை ஒத்தது எனக்கருதி, தொடர்புடைய வழக்குதாரணங்களை எடுத்துக் காட்டி ஜோனிற்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் (02) மீது சிறுகுறிப்பு எழுதுக.

(அ). பக்கச் சார்பிற்கு எதிரான விதி

(ஆ). முகத்தோற்றளவிலான தவறு

(இ). நெறிமுறையான எதிர்பார்ப்பு

(10 X 2 = 20 புள்ளிகள்)

புதிப்புரிமை பெற்றது